<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:-திரு.கே.கமலநாதன்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
(கூடுதல் பொறுப்பு)
சிதம்பரம்.

2023-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் நாள் புதன்கிழமை
இடை மனு எண்:163/22 in அசல் வழக்கு எண்: 51/2020

சிவகாமசுந்தரி ....மனுதாரர்/வாதி

/எதிர்/

சுந்தரி … எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் 8.2.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.ராமதாஸ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சுகுமாறன் அவர்கள் ஆஜராகியும் இதுநாள்வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் உத்தரவு.........

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 8 மற்றும் விதி 9-ன் கீழ் மனுதாரர்கள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள பதில் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்று கொண்டு அசல் வழக்கை மேல்உத்தரவு செய்யவேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:</u>

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் மனுதாரர் பிரதிவாதி பேரில் வழக்கை விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும் அதில் சில பொய்யான விவரங்கள் சொல்லப்பட்டு உள்ளதாகவும், அதனை தற்போது இத்துடன் தாக்கல் செய்யப்படும் பதில் வழக்குரையில் சொல்லப்பட்டு தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த பதில் எதிர்வழக்குரையை ஏற்றால்தான் வழக்கில் தனக்கு கூடிவரக்கூடிய நல்ல கட்சி ஏற்படும் என்றும், எனவே அசல் வழக்கில் இந்த மனுவுடன் கொடுக்கும் பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்:</u>

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு சரியல்ல என்றும் அசல் வழக்கின பிராதில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை முழுவதுமாக மறுத்து குறிப்பிட்டும் வாதி கரைபடிந்த கரங்களுடன் வழக்குரையை தாக்கல் செய்தது மட்டுமல்லாமல் பொய்யான சங்கதிகளுடன் பதில் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதியின் பதில் வழக்குரையை ஏற்க தாக்கல் செய்யப்பட்டிக்கும் இம்மனு தள்ளுபடி

செய்ய வேண்டியது என்றும் எதிர்மனுதாரர் இம்மனுவினை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

வாதி அசல் வழக்கை பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனம் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும் அதில் சில பொய்யான விவரங்கள் சொல்லப்பட்டு உள்ளதாகவும், அதனை தற்போது இத்துடன் தாக்கல் செய்யப்படும் பதில் வழக்குரையில் சொல்லப்பட்டு தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த பதில் எதிர்வழக்குரையை ஏற்றால்தான் வழக்கில் தனக்கு கூடிவரக்கூடிய நல்ல கட்சி ஏற்படும் என்றும் எனவே அசல் வழக்கில் இந்த மனுவுடன் கொடுக்கும் பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள மனுதாரர் இந்த இடைமனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபணை செய்திருந்தாலும் அசல் வழக்கு எதிர்வழக்குரையில் பிரதிவாதிகளால் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் முற்றிலும், முரணானதாக உள்ளதாக மனுதாரர் கருதினால் மனுதாரர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்வது என்பது வழக்கமான ஒன்றாகும். பதிலுரையில் கூறப்பட்ட சங்கதிகள் உண்மையானதா இல்லையா என்பதை வழக்கு விசாரணை முடிவில் தெரியவரும். வழக்கு விசாரணை ஆரம்பிக்காத நிலையில் இம்மனு தாக்கல் செய்திருப்பதால் இந்த இடைமனுவை அனுமதித்து, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் பதில் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்றுக்கொண்டு மேற்கொண்டு நடத்துவது என்பது தான் நீதிக்கு உகந்ததாக இருக்கும். அதேசமயத்தில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலை ஈடுசெய்யும் வகையில் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே சரியானதீர்வாக இருக்கும் என தீர்வு காணப்படுகிறது.

இறுதியில் இறுதியாக, மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.500-ஐ 22.2.2023-க்குள் கொடுக்கும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. அழைக்க 22.2.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 15.2.2023ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K KAMALANATHAN

Digitally signed by K KAMALANATHAN
Date: 2023.03.01 12:15:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம். (FAC)